

திருவொற்றியூர் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் எல்.சுந்தர்ராஜ் 9–ஆவது வட்டத்திற்குட்பட்ட நடபாய் தோட்டம், துலுக்கானம் தெரு, பகுதிகளில் தேர்தல் பணிக்குழு தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. தலைமையில், கிழக்கு பகுதி செயலாளர் தி.மு.தனியரசு எம்.சி. முன்னிலையில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது துலுக்கானம் தெருவில் அமைந்துள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், பகுதி நிர்வாகிகள் ஆர்.சி.ஆசைத்தம்பி, எம்.வி.குமார், இரா.குமரேசன், கே.பிரபாவதி உள்ளனர்.

### இராயபுரம் 50 வது வட்டத்தில்

## ஆ.சுபேர்கானை ஆதரித்து வாக்கு சேகரிப்பு!

### மா.தாஸ் – ஜான் மேரிதாஸ் தலைமையில்!

சென்னை, ஏப். 14-

இராயபுரம் தொகுதி கழக வேட்பாளர் டாக்டர் ஆ.சுபேர்கானை ஆதரித்து, இராயபுரம் 50வது வட்டம், 77, 78,வது பாகத்தில் முன்னாள் வட்டச் செயலாளர் மா.தாஸ், முன்னாள் மாமன்ற உறுப்பினர் ஜான் மேரி தாஸ் ஆகியோர் தலைமையில் தீவிர வாக்கு சேகரித்தனர்.

இராயபுரம் கிழக்கு பகுதி 50வது வட்டம் மாரியம்மன் கோவில் சந்து, மார்கெட் சந்து 78பாகம் தம்புலைன் 77 பாகத்தில் முன்னாள் வட்ட செயலாளர் மா.தாஸ், முன்னாள் மாமன்ற உறுப்பினர் திருமதி ஜான்மேரிதாஸ் தலைமையில் கழக உடன் பிறப்புகள், பெரியநாயக ராஜ், உதயா,மார்கெட் சந்து திரு.கலைமணி, பாலாஜி, ஏ.சசிகுமார், சி. சந்திரன், எஸ்.கோவிந்தராஜ், பி.தயாளன், சி.ராஜா ஆகியோர் இராயபுரம் தொகுதி கழக வேட்பாளர் டாக்டர் ஆ.சுபேர்கானை ஆதரித்து வாக்கு சேகரித்தனர்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி, திராவிட முன்னேற்ற கழக வேட்பாளர் த.வேலுவை, நேற்று அகில இந்திய பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் மற்றும் வன்னியர் சங்கங்களின் கூட்டமைப்புத் தலைவர் சி.என். ராமமூர்த்தி மற்றும் துணை தலைவர் கே.வெங்கடேசன் ஆகியோர் சந்தித்து தங்களது ஆதரவை தெரிவித்தனர்.

### தி.மு.க. ஆட்சிக்காலத்தில்தான்

## மாணவர்களின் கல்வி நலனுக்காக பல்வேறு நலத் திட்டங்கள்!

### அமைச்சர் துரைமுருகன் வாக்கு சேகரிப்பின் போது பெருமிதம்!

வேலூர், ஏப்.14-

தி.மு.க. ஆட்சிக்காலத்தில் மாணவர்களின் கல்வி நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன என்று அமைச்சர் துரைமுருகன் வாக்கு சேகரிப்பின் போது பெருமிதத்துடன் கூறினார்.

வேலூர் மாவட்டம் காட்பாடி சட்டமன்ற தொகுதி தி.மு.க. வேட்பாளர், அமைச்சர் துரைமுருகன் வேலூர் மாநகராட்சிக்கு உட்பட்ட 8வது வார்டு பாரதிநகர், குளக்கரை, கஸ்தூரிபாய் தெரு, 6வது வார்டு பழைய காட்பாடி, திருவள்ளுவர் நகர் மற்றும் மந்தைவெளி, திருநகர், பேங்க்நகர், அருப்புமேடு உள்ளிட்ட பகுதிகளில் உதயசூரியன் சின்னத்துக்கு வாக்கு சேகரித்தார். அப்போது அவருக்கு பொதுமக்கள் மலர்தூவியும், ஆரத்தி எடுத்தும், மேள தாளங்கள் முழங்க சிறப்பான வரவேற்பு அளித்தனர். வாக்கு சேகரிப்பின் போது அமைச்சர் துரைமுருகன், பொதுமக்களிடம் கூறியதாவது: காட்பாடி தொகுதியில் உள்ள அருப்பு மேடு உள்பட பல்வேறு இடங்கள் சென்னையை போன்று சிறப்பான வளர்ச்சி அடைந்துள்ளன. தி.மு.க. ஆட்சிக்காலத்தில் தான் பெரும்பான்மை யான வளர்ச்சி ஏற்பட்டது. திருவள்ளுவர் நகரில் ரூ.13 லட்சத்தில் ரேஷன்கடை கட்டி திறக்கப்பட்டுள்ளது. குடிநீர் சுத்திகரிப்பு நிலைய பணிகள் நிறைவடைந்து விட்டது. தேர்தலுக்கு பின்னர் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் கொண்டு வரப்படும். ஒரு சமுதாயம் முன்னேற்றம் அடைய பல்வேறு திட்டங்களை தி.மு.க. அரசு செய்துள்ளது.

மாணவர்களின் கல்வி நலனுக்காக...

பெண்களின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் அரசு டவுன் பஸ்களில் பெண்கள் கட்டணமில்லா பயணம் செல்லும் திட்டம் கொண்டு வரப்பட்டது. பெண்கள் தங்கள் குடும்பத்தின் சிறிய தேவை, குழந்தைகளை கவனிப்பதற்காக மாதந்தோறும் ரூ.1,000 உரிமைத்தொகை வழங்கப்

படுகிறது. தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் மகளிர் உரிமைத்தொகை ரூ.2 ஆயிரமாக வழங்கப்படும். அரசு, அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 கல்வி உதவித்தொகை, அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவுத்திட்டம், கல்லூரி இறுதியாண்டு பயிலும் மாணவர்களுக்கு மடிக்கணினி, நான் முதல்வன் திட்டம் உள்பட மாணவர்களின் கல்வி நலனுக்காக பல்வேறு திட்டங்கள் தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்டது. வேலூர் மாநகராட்சி துணைமேயர் சுனில்குமார் இந்த பகுதியை சிறந்த திட்டங்கள், கடினமான உழைப்பால் சென்னை தி. நகரை போன்று மாற்றி உள்ளார். இவ்வாறு அமைச்சர் பேசினார். பிரசாரத்தின் போது துணைமேயர் எம்.சுனில்குமார் மற்றும் தி.மு.க., கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

## திருவெறும்பூர் தொகுதியில் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தீவிர வாக்கு சேகரிப்பு !

திருச்சி, ஏப்.14-

திருச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட திருவெறும்பூர் பரப்புரை சூடுபிடித்துள்ள நிலையில், தி.மு.க. வேட்பாளரும் அமைச்சருமான முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று முன்தினம் (ஏப்ரல் 12) மாநகராட்சிக்குட்பட்ட பொன்மலைப் பகுதியில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

பரப்புரை நடைபெற்ற இடங்கள்:

பொன்மலைப் பகுதிக்குட்பட்ட வார்டு எண்கள் 45 மற்றும் 45Aவில் அமைந்திருக்கும்:

- கல்கண்டார்கோட்டை
- பொன்னேரிபுரம்
- மூகாம்பிகை நகர்
- திருநகர்
- பெரியார் நகர்
- பொன்மலைப்பட்டி
- மொராய் சிட்டி எக்ஸ்டென்ஷன்

ஆகிய பகுதிகளில் திறந்த நிலையில் உள்ள ஜீப்பில் சென்றபடி அமைச்சர் வீதி வீதியாக வாக்கு சேகரித்தார்.

உரையின் சிறப்பம்சங்கள்:

பரப்புரையின் போது பொதுமக்கள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் அன்பில் மகேஸ், கடந்த ஐந்து ஆண்டுகளில் கழக அரசு செயல்படுத்திய சாதனைத் திட்டங்களையும், குறிப்பாக அந்தந்த வார்டுகளில் நிறைவேற்றப் பட்ட உட்கட்டமைப்புப் பணிகளையும் விரிவாக எடுத்துக் கூறினார். தமிழக அரசின் மக்கள் நலத்திட்டங்கள் தொடர மீண்டும் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

பங்கேற்ற நிர்வாகி கள்:

இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு. மதிவாணன், பகுதிக் கழகச் செயலாளர் தர்மராஜ், வட்டக் கழகச் செயலாளர்கள் தமிழ்மணி, முருகானந்தம், மாமன்ற உறுப்பினர் சித்தாலட்சுமி முருகானந்தம் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பா ளர்கள், கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகி கள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## மாதவரம் சட்டமன்ற தொகுதியில் தி.மு.க. கூட்டணி

## மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் வாக்கு சேகரிப்பு!



சென்னைவடகிழக்கு மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி வடக்கு பகுதி உட்பட்ட வார்டு 19 யில் உள்ள மஞ்சம்பக்கம், மாத்தூர் 1, 2 பகுதி, மாத்தூர் MMDA 1,2,3, பிரதான சாலைகள், குறுக்கு தெருக்கள் மற்றும் சின்ன மாத்தூர் ஆகிய இடங்களில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி மாதவரம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் M.A.B.L., அவர்கள் தேர்தல் பரப்பரையை தொடங்கி வாக்கு சேகரிக்கும் விவரம் பின்வருமாறு

**14.04.2026 - இன்று**

| வ.எண் | பிரச்சாரம் மேற்கொள்ளும் இடங்கள் | நேரம் |
|---|---|---|
| 1 | வடக்கு பகுதி வார்டு 19 மஞ்சம்பக்கம், மாத்தூர் 1, 2 பகுதி, மாத்தூர் MMDA 1,2,3, பிரதான சாலைகள், குறுக்கு தெருக்கள் மற்றும் சின்ன மாத்தூர் | மாலை 3.00 – 10.00 வரை |

மேற்குறிப்பிட்டுள்ள பகுதியில் உள்ள சம்மந்தப்பட்ட கழக நிர்வாகிகள், திமுக கூட்டணியின் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது.

**மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.**
செயலாளர், வடகிழக்கு மாவட்ட தி.மு.க.

சட்டமன்றத் தொகுதி தேர்தல்



”களத்தில் இளைஞர் அணி – சார்பில் சைதை மேற்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் இரா.வெங்கடேசன் தலைமையில் இளைஞர் அணியை சார்ந்த நிர்வாகிகள் 142வது வட்டத்தில் உள்ள கோதாமேடு, திடீர்நகர், மேக்சி லேண்ட், சலவையாளர் காலனி, அண்ணாநகர் சலவை துறை, அப்துல்லா ரசாக் தெரு ஆகிய தெருக்களில் மதசார்ப்பற்ற முற்போக்கு கூட்டணியின் சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி வேட்பாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களை ஆதரித்து வாக்காளர்களை சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குக்கள் சேகரித்தனர். உடன் கே.பிரபு, கே.தாஸ், பாலமுருகன், லட்சுமிபதி, கார்த்தி, தாரிப் அன்சாரி, மோகன், அரவிந்த், அருள், சரண், அரி, மணி, அஜித், விஷால் உள்ளிட்ட தோழமை கட்சிகளை சார்ந்த நிர்வாகிகள் பெருதிரளராக பங்கேற்றனர்.



இராயபுரம் கிழக்கு பகுதி 50வது வட்டம் மாரியம்மன் கோவில் சந்து, மார்கெட்சந்து 78பாகம் தம்புலைன் 77 பாகத்தில் முன்னாள் வட்டசெயலாளர் மா.தாஸ், முன்னாள் மாமன்ற உறுப்பினர் திருமதி ஜான்மேரி தாஸ் தலைமையில் கழக உடன்பிறப்புகள், பெரியநாயகராஜ், உதயா,மார்கெட் சந்து திரு.கலைமணி, பாலாஜி, ஏ.சசிகுமார், சி. சந்திரன், எஸ்.கோவிந்தராஜ், பி.தயாளன், சி.ராஜா ஆகியோர் இராயபுரம் தொகுதி கழக வேட்பாளர் டாக்டர் ஆ.சுபேர்கானை ஆதரித்து வாக்கு சேகரித்தனர்.

### இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள

## காரைக்கால் மீனவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை வேண்டும்!

### புதுவை மாநில தி.மு.க. அமைப்பாளர் இரா. சிவா ஒன்றிய அரசுக்கு வலியுறுத்தல் !



புதுச்சேரி, ஏப்.14-

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள காரைக்கால் மீனவர்கள் 12 பேரை உடனடியாக விடுவிக்க ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என புதுச்சேரி மாநில திமுக அமைப்பாளர் இரா. சிவா வலியுறுத்தி உள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் கூறியிருப்ப தாவது: -

காரைக்கால் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து கடலுக்கு மீன் பிடிக்க செல்லும் மீனவர்களை எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி இலங்கை கடற்படை கைது செய்வதும், படகுகளை பறிமுதல் செய்வதையும் வாடிக்கையாக கொண்டுள்ளது. இதுகுறித்து புதுச்சேரி அரசு ஒன்றிய அரசுடன் பேசி இப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. இருப்பினும் ஒன்றிய அரசின் அலட்சியத்தால் மீனவர்கள் கைது செய்யப்படுவது தொடர்கதையாகி வருகிறது.

காரைக்கால் கிளிஞ்சல் மேடு, சுனாமி நகரைச் சேர்ந்த வீரவேல், திருப்பட்டினம் கீழையூர் பகுதியைச் சேர்ந்த பிரதீப், சாமந்தான்பேட்டை தமிழ்வாணன், கோட்டுச்சேரி சஞ்சய் உள்ளிட்ட 12 மீனவர்கள் விசைப்படகில் கடந்த 10ம் தேதி INDPYPKMM1338 பதிவு எண் கொண்ட விசைப்படகில் காரைக்கால் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். இதில் புதுச்சேரி மாநிலம், காரைக்கால் மாவட்டத்தைச் சேர்ந்த ஏழு மீனவர்களும், புதுச்சேரியை ஒட்டிய தமிழகப் பகுதியைச் சேர்ந்த ஐந்து பேரும் அடங்குவர்.

இந்நிலையில், 11-ஆம் தேதி நள்ளிரவு கோடியக்கரைக்கு தென்கிழக்கு பகுதியில் நடுக்கடலில் மீன்பிடித் துக் கொண்டிருந்த காரைக்கால் மீனவர்களின் விசைப்படகை சுற்றி வளைத்த இலங்கை கடற்படையினர் விசைப்படகை யும், மீனவர்கள் 12 பேரையும் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி கைது செய்துள்ளனர். மீனவர்கள் கைது, அவர்களின் விசைப் படகு, மீன்பிடிவலை மற்றும் பல லட்சம் பெருமானமுள்ள மீன்களை பறிமுதல் செய்து, காரைக்கால் மீனவர்களை சிறையில் அடைத்திருக்கும் செயல் மிகவும் கண்டிக்கத்தக்க செயலாகும். இலங்கை கடற்படையின் தொடர் அத்துமீறலை ஒன்றிய அரசு வேடிக்கை பார்ப்பது வேதனையாக உள்ளது.

இச்சம்பவம் ஒட்டு மொத்த காரைக்கால் மீனவர்களையும் துயரத்தில் ஆழ்த்தி உள்ளது. இவ்விவகாரத்தில் புதுச்சேரி அரசும், ஒன்றிய அரசும் காலதாம படுத்தாமல் 11-ஆம் தேதி கைது செய்யப்பட்டு இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்கள் 12 பேரையும், அவர்கள் பறிமுதல் செய்த விசைப்படகை யும் உடனடியாக விடுவிக்க போர்க்கால அடிப்படை யில் நடவடிக்கை எடுக்க வேண்டும். மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சி னைக்கு ஒன்றிய அரசு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்று புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறோம்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதியின் வெற்றி வேட்பாளர் தோழர் எல்.சுந்தர்ராஜை ஆதரித்து திருவொற்றியூர் மத்திய பகுதி இளைஞர் அணி சார்பில் தேர்தல் பரப்புரை 22 வது வட்ட கழக செயலாளர் தச.கரிகாலசோழன் தலைமையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார் முன்னிலையில் நடைபெற்றது. இதில் கேபிள் த.வேல்கணேசன், எஸ். ஸ்டாலின், எஸ்.விக்னேஷ், ஆர்.லோகேஷ்பிரபு, சகா செந்தில், ஆட்டோ பாஸ்கர், ஆர்.மகேஷ், பாஸ்கர் ராகேஷ், பிரகாஷ், சுடரொலி, மோகன், பார்த்திபன், மனோகரன், காமெஷ், நந்தகுமார், ஶ்ரீநாத் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளரும், மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதி கழக வெற்றி வேட்பாளருமான மயிலை த.வேலுவை ஆதரித்து தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவைத் தலைவர் கி.நடராசன் உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார். இதில் பேரவை நிர்வாகிகள், மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்க பொதுச் செயலாளர் த.சரவணகுமார், பொருளாளர் கி.சீனிவாசன், தலைமை நிலையச் செயலாளர் அ.தங்கராஜ், பிரச்சார செயலாளர் மு.ஜோதி, அலுவலக பணியாளர்கள் சங்கப் பொதுச் செயலாளர் வி.மகேந்திரன் மற்றும் சங்க நிர்வாகிகள், முன்னோடிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

### மயிலை மேற்குப் பகுதி தி.மு.க. மாணவர் அணி சார்பில்

## கழக வேட்பாளர் மயிலை வேலுவை ஆதரித்து 122 வது வட்டத்தில் வாக்கு சேகரிப்பு!

### அமைப்பாளர் ஆர்.ராமு அறிவிப்பு!

சென்னை, ஏப். 14-

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றி வேட்பாளர் அண்ணன் மயிலை த.வேலுவை ஆதரித்து உதயசூரியனுக்கு வாக்கு சேகரிப்பு மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் மதி எம்.சி., 122 வது வட்டச். செயலாளர் ராஜா சுரேஷ், மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் எஸ்.சரவணன் அவர்களின் அறிவுறுத்தலின்படி மயிலை மேற்கு பகுதி தி.மு.க மாணவர் அணி சார்பில் இன்று (14.4.2026) மாலை 5 மணியளிவில் 122 வது வட்டம் முழுவதும் வீடு வீடாக சென்று பிரச்சாரம் நடைபெறுகிறது.

இதில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் தா.தாமு, ம.முகிலன், பாஸ்கர், மணிகண்டன், அருண்குமார், சங்கர், கார்த்திக், ஜீவா, சுபஶ்ரீ ஆகியோர் வரவேற்கின்றனர்.

எனவே மயிலை மேற்கு பகுதி மாணவர் அணி மற்றும் கழக செயல் வீரர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறோம்.

இவ்வாறு மயிலை மேற்கு பகுதி மாணவரணி அமைப்பாளர் ஆர்.ராமு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 38வது வட்டத்தில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர் ஜே.ஜே.எபினேசர் அவர்களை ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு 4வது மண்டல குழு தலைவரும் வட்டக் கழகச் செயலாளர் நேதாஜி யு.கணேசன் எம்.சி, நேதாஜி நகர், நாவலர் குடியிருப்பு, துர்கா தேவி நகர், பகுதியில் வீடுவீடாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் வழக்கறிஞர் எஸ்.சரவணகுமார், ஏ.முருகேசன், கே.சி.ராஜா, எஸ். கிருஷ்ணன், எஸ்.ராஜா, எம்.விமலா, எம்.பி.பாலு, ஏ.ஆனந்தன், ஏ.மோகன், எஸ்.கமருதீன், எல்.சந்துரு, எஸ்.சக்திவேல், கே.ஜானகி ராமன், கழகத் தோழர்கள் பாகம் முகவர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.